பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: மார்கழி 6 (20—12—68) வெள்ளி ★ வெளியூர்: மார்கழி 7 (21—12—68) சனி [இதழ்: 155

நீதிபதிக்குக் கட்டாய ஓய்வு

தவறான நடத்தை காரணமாம்

பெங்களூர், டிச. 20—

"மைசூர் நீதித் துறையில் பணியாற்றும் சிவில் நீதிபதி ஒருவருக்கு அலுவலில் தவறான நடத்தை காரணமாக கட்டாய ஓய்வு தரப்பட்டிருக்கிறது"

என்று தொழிலமைச்சர் இராச சேகரமூர்த்தி அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின் தெரிவித்தார்.

நாகர்கோயிலில் மு. கருணாநிதி

குமரி மாவட்ட மக்கள் அளித்த மகத்தான வரவேற்பு

இலட்சம் பேர் அடங்கிய பொதுக்கூட்டத்தில் தேர்தல் பிரசார முழக்கம்

நாகர்கோயில், டிச. 20 —

நேற்று மாலை நாகர்கோவிலில் இலட்சம் பேர்கள் கலந்துகொண்ட மாபெரும் பொதுக்கூட்டத்தில், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு, கூட்டணி வேட்பாளர் டாக்டர் மத்தியாசுக்கு ஆதரவளிக்குமாறு வாக்காளப் பெருமக்களைக் கேட்டுக்கொண்டார்.

கடந்த இருபதாண்டுக் காலத்தில் காங்கிரசு ஆட்சியில் மக்கள்கண்ட சாதனைகளையும், இரண்டாண்டுக் காலத்தில் கழக ஆட்சி புரிந்துள்ள சாதனைகளையும் ஒப்பிட்டுக்காட்டி, மக்களின் சிந்தனையைத் தூண்டினார்.

உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மா.முத்துசாமி அவர்களும் முன்பே இங்கு வந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

கழக அமைப்புச் செயலாளர் திரு.என்.வி.நடராசன் எம்.எல்.சி. அவர்களும், கழகச் சட்டமன்ற—நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் ஏற்கனவே நாகர்கோவில் வந்து தேர்தல் பணிகளைக் கவனித்துவருவது குறிப்பிடத் தக்கது.

விமானம் மூலம் திருவனந்தபுரம் வந்திறங்கி, அங்கிருந்து காரில் நாகர்கோவிலுக்கு வந்து சேர்ந்த அமைச்சர் கருணாநிதி அவர்கட்கு, குமரி மாவட்ட மக்கள் மகத்தான வரவேற்பு அளித்தனர்.

திருவனந்தபுரம் விமான நிலையத்தில், நாகர்கோவிலில் தங்கியிருந்து தேர்தல் பணியாற்றும் அமைச்சர் முத்துசாமி, வேட்பாளர் டாக்டர் மத்தியாஸ், எம். சி. பாலன் எம்.எல்.ஏ., டாக்டர் சந்தோஷம், எஸ்.எஸ். மாரிசாமி எம்.பி., எம்.எஸ் சிவசாமி எம்.எல்.ஏ., ஆலடி அருணா எம்.எல்.ஏ. ஆகியோரும், எண்ணற்ற கழகத் தோழர்களும் வந்திருந்து அமைச்சர் கருணாநிதியை வரவேற்றனர். அமைச்சருடன், சட்டமன்றக் கட்சிக் கொறடா து. ப. அழகமுத்துவும், மைனர் மோசசும் வந்திருந்தனர்.

ஈ. எம். எஸ். சந்திப்பு

கொச்சிக்குச் செல்வதற்காக விமான நிலையத்துக்கு வந்திருந்த கேரள முதல்வர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு, விமான நிலையத்தில் அமைச்சர் கருணாநிதியைச் சந்தித்தபோது உடல்நலம் விசாரித்தார்.

திருவனந்தபுரத்திலிருந்து தமிழக எல்லைவரை உள்ள 14 மைல் தூரமும் வழிநெடுக இருமருங்கிலும் தோழர்கள் திரண்டிருந்து, அமைச்சரை வரவேற்றனர்.

நாகர்கோவில் தொகுதியைச் சேர்ந்த களிக்காவளையில், கருணாநிதி வந்த கார் நுழைந்தபோது, அங்கு பிரம்மாண்டமான வரவேற்பினை அப்பகுதி மக்களும், கழகத் தோழர்களும், கூட்டணி கட்சியினரும் அளித்தனர்; அந்தப் பகுதியே விழாக்கோலம் பூண்டிருந்தது.

பகுதி முழுவதிலும் வண்ணத் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன; வாண வேடிக்கைகள் நடத்தி வரவேற்பு அளிக்கப்பட்டது.

நாகர்கோவிலின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த எண்ணற்ற தோழர்கள், அங்கு அமைச்சரைச் சந்திக்க வந்திருந்தனர்.

அங்கிருந்து அமைச்சர் கருணாநிதி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்; களிக்காவளை படந்தாளமோடு, குழித்துறை, மார்த்தாண்டம், அழகிய மண்டபம், முளகுமோடு, தக்கலை, பார்வதிபுரம் வழியாக நாகர்கோவில் நகரத்துக்கு வந்தார்.

வழிநெடுக 2 மைலுக்கு ஓர் இடத்தில் கழகக் கொடியை அமைச்சர் கருணாநிதி ஏற்றுவித்தார்.

அமைச்சர் கருணாநிதியின் கார் பார்வதிபுரம் அருகில் வந்தபோது, சாலையோரத்தில் உள்ள 200 அடிக்குமேல் உயரமான குன்று ஒன்றின் மீது கழகத் தோழர்கள் நின்றுகொண்டு—மிகப் பெரிய கழகக் கொடி ஒன்றை கம்பீரமாக தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்த காட்சி அனைவருடைய கருத்தையும் கவருவதாக இருந்தது.

பிற்பகல் 4-மணிக்கு நாகர்கோவில் நகரத்தில் உள்ள பயணிகள விடுதியை அமைச்சர் வந்தடைந்தார்.

பிரமுகர்களுடன் ஆலோசனை

அங்கு, சி. பா. ஆதித்தனார், அமைச்சர் முத்துசாமி, மற்றும் கழக சட்டமன்ற உறுப்பினர்கள், கூட்டணிக் கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள், பிரமுகர்களுடன் தேர்தல் பணி குறித்து விவாதித்தார்.

பின்னர் நாகர்கோவில் நாகராசர் திடலில் நடைபெற்ற ஏறக்குறைய ஒரு இலட்சம் பேரடங்கிய பிரும்மாண்டமான பொதுக்கூட்டத்தில் கருணாநிதி பேசினார்.

அக்கூட்டத்தில் அமைச்சர் திரு. முத்துசாமி, சி. பா. ஆதித்தனார் எம்.எல்.ஏ., எஸ். எஸ். மாரிசாமி எம்.பி., டாக்டர் மத்தியாஸ், டாக்டர் சந்தோஷம், து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ., எம். சி. பாலன் எம்.எல்.ஏ., எம். எஸ். சிவசாமி எம்.எல்.ஏ., ஆலடி அருணா எம்.எல்.ஏ. முன்னாள் மேயர் மைனர் மோசஸ் சா. கணேசன் (சுதந்திரா), மைக்கேல் ராஜ் ஆகியோர் பேசினர்.

மாவட்டச் செயலாளர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

அமைச்சர் கருணாநிதி அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:—

இந்தத் தேர்தலில் வாக்களிக்கு முன் தி. மு. கழக அரசுசெய்த நன்மைகளை எண்ணிப் பார்த்து -- இந்த அரசுக்கு உற்சாகம் அளிக்கும் வகையில் வாக்களித்திட வேண்டும்.

கோதையாற்றுத் திட்டம்

கோதையாற்றுத் திட்டம்பற்றி இங்கே காங்கிரசுக்காரர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள்; அதன் உண்மையான விவரம் என்ன?

கோதையாற்றுத் திட்டம் காங்கிரசு ஆட்சிக் காலத்தில் போடப்பட்டது என்றாலும், அதன் மொத்த மதிப்பீடு ரூ 1,484-இலட்சமாகும்; அந்தத் திட்டம் துவங்கிய நாள் 15—4—64 ஆகும்.

1964-ம் ஆண்டுமுதல் 1967-வரை அவர்களது ஆட்சி அந்தத் திட்டத்திற்காகச் செலவழித்த தொகை ரூ. 385-இலட்சமாகும்; ஆனால், நாங்கள் 1967 மார்ச் திங்களிலிருந்து ஒரே ஆண்டில் செலவழித்த தொகை ரூ. 558 இலட்சமாகும்.

இதிலிருந்தே அந்தத் திட்டத்தை வேகமாகச் செயல்படுத்திட முயலுபவர்கள் யார் என்பது உங்களுக்குத் தெரியும்!

சித்தாறு-பட்டணங்கால் திட்டம்

அடுத்து, சித்தாறு -- பட்டணங்கால் திட்டம்; இந்தத் திட்டம், 1963-ம் ஆண்டு துவங்கியது; அதன் மொத்த மதிப்பீடு ரூ. 733 இலட்சமாகும்; 1967-வரை இத்திட்டத்திற்கு அவர்கள் ஆட்சி செலவழித்தது ரூ. 280 இலட்சமாகும்; இது, நான்கு ஆண்டுகளில் செலவழித்ததாகும்.

ஆனால் நாங்களோ, ஒரே ஆண்டில் ரூ. 150-இலட்சம் செலவழித்து அந்தத் திட்டத்தை வேகமாக முடித்திட முயற்சி செய்கிறோம்.

கிராம நல வளர்ச்சி

கிராம நல வளர்ச்சித் திட்டத்தில், 1962-முதல் 1967-வரை ஐந்தாண்டுகளில் ரூ. 43-இலட்சம் அவர்கள் ஆட்சியில் செலவிட்டனர்.

ஆனால் நாங்களோ, 1967—68-ம் ஆண்டில் ரூ. 18-இலட்சமும், 1968—69-ம் ஆண்டில் ரூ. 27.5 இலட்சமும் செலவழித்தோம்.

போக்குவரத்துத் துறையில்...

போக்குவரத்துத் துறையில், 1967 மார்ச்வரை இங்கு 72 வழித் தடங்களில்தான் பஸ்கள் ஓடின; இப்போது 133 வழித் தடங்களில் பஸ்கள் ஓடுகின்றன.

அந்தத் துறையில் அவர்கள் ஆட்சியில் ஆயிரம் ஊழியர்கள் தான் இருந்தார்கள்; இப்போது இரண்டாயிரத்துநூறு ஊழியர்கள் இருக்கின்றனர்.

எங்கள் ஆட்சியில் தேசியமயத் திட்டத்தின்கீழ் வந்த வழித் தடங்கள் 55.

தேசியமயத் திட்டத்தை அடுத்துத் தனியார் பஸ்களில் பணி புரிந்தோரை நாங்கள் வேலைக்கு எடுத்துக்கொண்டோம்; அவ்விதம் வேலைக்கு எடுத்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை 464.

கடலரிப்புத் தடுப்பு

'கடல் அரிப்புத் தொல்லை இருக்கிறது' என்று சொல்ல -- காமராசர், 'இதற்குக்கூடத் திட்டம் இல்லையா' என்று கூறி வருத்தப்பட்டாராம்.

ஆனால், நேசமணி உயிரோடு இருக்கும்போதே மீனவர்களின் நன்மைக்காக ரூ. 3 இலட்சம் செலவில் கடல் அரிப்பைத் தடுக்கும் திட்டம் பரிசீலனைக்கு வந்துவிட்டது.

பள்ளம்துரை, மேலமணக்குடி, மிடாளம் முதலிய இடங்களில் கடல் அரிப்பைத் தடுக்க மூன்று இலட்ச ரூபாய்ச் செலவிடும் திட்டம் பற்றிய பரிசீலனை அவர்கள் ஆட்சியிலேயே இருந்தது; இதையறியாமல், முன்னாள் முதலமைச்சர் காமராசர் பேசியிருப்பது வேடிக்கையாக இருக்கிறது.

1964-ம் ஆண்டில் ஏழரை இலட்சம் ரூபாய்ச் செலவில் நாகர்கோயில் மருத்துவமனை கட்ட யோசனை பிறந்தது; அதைப் பழைய அரசு ஏற்க மறுத்து ரத்துச் செய்தது; ஆனால், புதிய அரசு அத்திட்டத்தை எடுத்துக் கொள்ள உத்தரவு ஒன்றை அனுப்பியிருக்கிறது!

இரண்டாண்டில் பன்னிரண்டு பள்ளிகள்

கல்வித் துறையில் புதிய அரசின் சாதனைகள் மகத்தானவையாகும்; குமரி மாவட்டம், 1965-ம் ஆண்டில் தமிழகத்துடன் சேர்ந்தது; 1967-வரை -- அதாவது 11 ஆண்டுகளில் --- காங்கிரசு ஆட்சியினர், 11 உயர்நிலைப் பள்ளிகளை மட்டுமே அமைத்தனர்!

ஆனால் இரண்டே ஆண்டுகளில் புதிய அரசு, 12 உயர்நிலைப் பள்ளிகளை அமைத்தது; 6 மத்தியதரப் பள்ளிகளை அமைத்தது.

புதிய அரசின் சாதனைகளை ஆதரிப்போர் --- பாராட்டுவோர் --- அதற்கு மேலும் உற்சாகமூட்ட நினைப்போர், நாகர்கோயில் தொகுதியில் டாக்டர் மத்தியாசை ஆதரித்து வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

உ. பி. மாநிலத்திலும் காங்கிரசு கரைகிறது!

150 பேர்களுடன் பிரபல காங்கிரசுத் தலைவர் முழுக்கு!

இலட்சுமணபுரி, டிச. 20—

பிரபல காங்கிரசுத் தலைவர் சந்திரசேகர் சாஸ்திரியும், மற்றும் 150 காங்கிரசுக்காரர்களும், காங்கிரசிலிருந்து வெளியேறிவிட்டனர்.

கல்லறை நோக்கிச் செல்லும் காங்கிரசின் கடைசிநேரக் கைவரிசை

கழகக் கூட்டணி தலைவர்கள்மீது கல்வீசும் அநாகரிகச் செயல்கள்!

நாகர்கோவில், டிச. 20—

நாகர்கோவிலில் தங்களுக்குத் தோல்வி உறுதி என்பதைப் புரிந்துகொண்டுவிட்ட காங்கிரசார், தங்களுக்கே உரித்தான காலித்தனங்களில் ஈடுபடத் தொடங்கிவிட்டனர்.

கூட்டணி வேட்பாளரை ஆதரித்துத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள முன்னாள் சட்டமன்ற அவைத் தலைவர் சி. பா. ஆதித்தனார் மீது கல் வீசியிருக்கின்றனர்.

அதேபோல், உள்ளாட்சி அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் கலந்துகொண்ட தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்திலும் காங்கிரசார் கலகம் செய்திருக்கின்றனர்.

மற்றும் பல இடங்களிலும் கூட்டணிக்கு ஆதரவாக வேலை செய்பவர்களைக் காங்கிரசார் தாக்கியிருக்கின்றனர்.

தொகுதியில் உள்ள கழகச் செயல் வீரர்களும், கூட்டணித் தோழர்களும், காங்கிரசாரின் தில்லுமுல்லு – திருவிளையாடல்களுக்கெல்லாம் அஞ்சாது, தொடர்ந்து தேர்தல் பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.

காங்கிரசாரின் இத்தகைய செயல்களினால், தொகுதி வாக்காளர்களிடையே காங்கிரசு மீது இருந்துவரும் கொஞ்சநஞ்ச அனுதாபமும் குறைந்து, கூட்டணி வேட்பாளர் டாக்டர் மத்தியாசுக்கு ஆதரவு பெருகிவருகிறது.

முரசொலி இரா.செழியன்

திருவள்ளுவராண்டு 1999 மார்கழி 6 (20—12—68) வெள்ளி

எதிர்பார்த்த முடிவு

பாண்டிச்சேரி மாநிலத்திலுள்ள நகராட்சி மன்றங்களுக்கான தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுவிட்டன. நாம் எதிர்பார்த்த படியே முடிவும் அமைந்திருக்கிறது.

இத்தேர்தல் முடிவு, காங்கிரசுக் கட்சிக்குப் படுதோல்வியைக் கொடுத்திருக்கிறது. இத்தோல்வி, காங்கிரசுக் கட்சியாலும் எதிர் பார்க்கப்பட்டதுதான்.

'தேர்தலில் எப்படியும் தோல்விதான் கிடைத்திடும்' என்ற உண்மை, காங்கிரசுக் கட்சிக்கு முன்கூட்டியே தெரியும். இவ் வுண்மையைத் தெரிந்திருந்த காரணத்தால்தான், நகராட்சி மன்றங் களின் ஆயுட்காலம் முடிவடைந்த பின்னரும்கூடத் தேர்வுகளை நடத்த விரும்பாமல், அப்பொழுது ஆட்சிப் பொறுப்பிலிருந்த காங்கிரசுக் கட்சி, காலங்கழித்துக்கொண்டு வந்தது.

சட்டப் பேரவை கலைக்கப்படாமல், பாண்டிச்சேரி மாநில ஆட் சிப் பொறுப்பு காங்கிரசுக் கட்சியினிடமே இப்பொழுதும் இருந்து வரும்படிசத்தில், நகராட்சிமன்றத்துக்கான தேர்தல்கள் நடந்திருக் கக்கூடுமா என்பது சந்தேகமே. ஏதாவது, பொருளற்ற காரணத் தைக் கூறிக்கொண்டு, நகராட்சிகளுக்கான தேர்தல்கு தள்ளிப் போட்டுக் கொண்டிருப்பதிலேயே காங்கிரசு ஆட்சி முனைந்திருக் கும்.

காங்கிரசுக் கட்சியைவிட அக்கட்சியைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர்களில் சிலர் விலகி விடவே கட்சியின் வலிவு குறைந்துபோய், காங்கிரசு அமைச்சரவையும் கவிழ்ந்து போகின்ற கட்டத்தை அடைந்துவிட்டது. இதன் விளைவாகச் சட்டமன்றம் கலைக்கப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஆட்சிக்கு பாண்டிச்சேரி உள்ளாக்கப்பட்டுவிட்டது.

இதற்குப் பின்னரே, சென்ற ஆண்டு இறுதிக்குள்ளாகவே நடந்து முடிந்திருக்கவேண்டிய மேற்படி தேர்தல்களே மேலும் நடத் தாமல் இருக்கக்கூடாது என்ற முடிவில், இப்பொழுது தேர்தல் நடத்தப்பட்டிருக்கிறது. தேர்தல் முடிவு, காங்கிரசுக் கட்சியினரின் அச்சத்தை உறுதி செய்துவிட்டிருக்கிறது.

பாண்டிச்சேரி மாநிலத்தில் மொத்தம் பதினைறு நகராட்சி மன் றங்கள் உள்ளன. நகராட்சி என்ற பெயர் பொருந்தக்கூடிய நில யில் அம்மாநிலத்தில், இரண்டு நகரங்கள்தான் இருக்கின்றன ; ஒன்று -- அம்மாநிலத்தின் தலைநகரமான பாண்டிச்சேரி அல்லது புதுவை ; மற்றொன்று -- காரைக்கால் நகரம்.

இவ்விரண்டு நகரங்களிலும் காங்கிரசுக் கட்சிக்குப் படு தோல்வி கிடைத்திருக்கிறது. இத்தேர்தல் முடிவில், இந்த இரண்டு நகரங்களிலும் காங்கிரசுக் கட்சிக்கு கிடைத்திருக்கின்ற மாபெரும் தோல்வியும், முன்னேற்றக் கழகம -- பொதுவுடைமைக் கட்சி (வலது) -- முஸ்லீம் லீக் ஆகிய மூன்று கட்சிகளிக் கொண்ட கூட்டணிக்குக் கிடைத்திருக்கக்கூடிய வெற்றியும், வரலாற்று முக் கியத்துவம் கொண்டதாகும்.

பாண்டிச்சேரி மாநிலம், பிரெஞ்சு ஏகாதிபத்தியக் கூட்டை அறத்துக்கொண்டு இந்தியப் பேரரசுடன் இணைந்த காலத்திலி ருந்து, இவ்விரண்டு நகராட்சிகளும் காங்கிரசுக் கட்சியின் பிடியில் தான் இருந்துவந்திருக்கின்றன. அதற்கு இந்தத் தேர்தலில் முற்றுப் புள்ளி வைக்கப்படுபடுக்கிறது என்றும், அந்த நிழற்சியை வர லாற்று முக்கியத்துவம்வாய்ந்ததாகத்தானே கொள்ளவேண்டும் ?

இவ்வரலாற்று முக்கியத்துவம் ஒருபக்கம் இருக்க, இவ்விரண்டு நகராட்சித் தேர்தல்களின் முடிவிலிருந்து, கூட்டணியைச் சேர்ந்த வர்கள் பெறவேண்டிய படிப்பினையும் இருக்கத்தான் செய்கிறது. அந்தப் படிப்பினையைத் தெளிவாகத் தெரிந்துகொண்டால்தான், அடுத்து நடைபெறவிருக்கின்ற சட்டப் பேரவைக்கான தேர்தலில் வெற்றிபெறுவதற்கான முறையை வகுத்துக்கொள்ளக் கூட்டணி யினரால் முடியும்.

பாண்டிச்சேரியைப் பொறுத்தவரையில், காங்கிரசுக் கட்சியும் பொதுவுடைமைக் கட்சியும் அங்குள்ள மக்களுக்கு நீண்ட நெடு நாட்களாக அறிமுகமான அரசியல் அமைப்புகளாகும். நமது முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், அங்குள்ள மக்கள் ஏற்கனவே அறிந்திருக்கின்றனர் என்றாலும், அறிந்திருக்க வேண் டிய அளவுக்கு அறிந்திருக்கவில்லை ; கொள்ளவேண்டிய அளவுக் குத் தொடர்பு கொண்டிருக்கவில்லை. இங்கத் தேர்தலிலதான் முதன முறையாக அங்குள்ள வாக்காளர்கள், கழகத்தின் மீது நம்பிக்கை வைத்து, கழகத்தைச் சேர்ந்தவர்களேயும், கழக ஆதரவாளர்களேயும் மிகுதியாகத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்.

இத்தேர்தலில் போட்டியிட்ட மற்ற அனைவரையும்விட மிகுதி யான வாக்குகளைப் பெற்றுத் தோல்தெடுக்கப்பட்டிருப்பவர் குபேர் அவர்களாவார். மாறறுக்கருத்தினரின் தாக்குதலுக்கும் தூற்றுதலுக்கும் ஆளாகி இருப்பவர் அவர். இருந்திட்டாலும், அத்தூற்றுதலேயும் தாக்குதலேயும் பொருட்படுத்தாது, அவரை மிகுதியான வாக்குகளால் வாக்காளர்கள் தேர்வு செய்திருக்கிறார் கள் என்பது, பொருள்படைத்த ஒன்றும்.

அரசியல் துறையில் குபேர் அவர்களே யார் எப்படி இழித்துப் பழித்தபோதிலும், பிரெஞ்சுப் படியிலிருந்து பாண்டிச்சேரி விடுபட்டு இந்தியப் பேரரசுடன் இணைவதற்கு முதல் காரணமாகவும் மூல காரணமாகவும் இருந்த அவரை, யார் மறந்திட்டாலும், வரலாறு மறந்திடாது. புதுவை சுதந்திர வரலாற்றில் குபேர அவர்களுக் குரிய இடம் எப்பொழுதும் இருந்திடத்தான் செய்யும்.

குபேர் முதியவர் ; புதுவை இராசதந்திரிகளில் முதலிடம் பெற்றிருப்பவர். அங்குள்ள மக்களின் மனட்போக்கை நன்கு தெரிந்துகொண்டிருக்கின்ற அரசியல்வாதி அவர்.

இத்தகு அரசியல் அனுபவம் பெற்றிருக்கின்ற குபேர் அவர் கள், இப்பொழுது நமது முன்னேற்றக் கழகத்தின் உறுப்பின ராவார். இனி அப்பகுதியில் முன்னேற்றக் கழக வளர்ச்சியில், அவர் இனி முழுமூச்சாக ஈடுபடுவார். முன்னேற்றக் கழகத்துக்கு எந்தவிதக் களங்கமும் ஏற்படலிடாமல் அவர், கழக வளர்ச்சியில் கருததைச் செலுத்துவார் என்பதில் ஐயமில்லை.

காரைக்கால் நகரத்தைப் பொறுத்தவரையில், கழகத்துக்கும் முஸ்லீம் லீக்குக்கும் அங்குள்ள மக்களிடம் நல்ல ஆதரவு உள்ளது என்பதை, இத்தேர்தல் முடிவு தெளிவாக்கிவிட்டிருக்கிறது. அந்த நகரத்திலும காங்கிரசுக் கட்சிக்குக் கிடைத்திருக்கின்ற தோல்வி குறைத்து மதிப்பிடக்கூடியதலல.

பாண்டிச்சேரி -- காரைக்கால் உட்பட மொத்தத்தில் ஏழு நகர சபைகள், கழகம் இணைந்திருக்கின்ற கூட்டணியிடம் அங்குள்ள வாக்காளர்கள் ஒப்படைத்திருக்கின்றனர். பதினாறு நகராட்சிமன் றங்களில் காங்கிரசு கைப்பற்றியிருப்பது நானகுதான் ; மீதி இருக் கின்ற ஐந்து நகராட்சிமன்றங்களில் கூட்டணியும் -- காங்கிரசுக் கட்சியும் ஒத்த பலத்தில் இருக்கின்றன.

நகரப் பகுதிகளில் காங்கிரசுக் கட்சிக்கு எதிராகக் கிளம்பி யிருக்கின்ற அளவுக்கு சிற்றூர்ப் பகுதிகளில் எதிர்ப்பு உணர்ச்சி உருவாகவில்லை என்பதை இத்தேர்தல் தெளிவுபடுத்தியுள்ளது. இதையே வேறு வகையில் குறிப்பிட வேண்டுமானால், சிற்றூர்ப் பகுதிகளில் கழகம இன்னும் பெறவேண்டிய அளவில் வலிவுபெற வில்லை என்பதேயாகும்.

குபேர் அவர்களுக்கு அருந்துணையாக, முன்னுள் முதலமைச் சராக இருந்து அகக்கட்சியைவிட்டு வெளியேறி நமது கழகத்தில் உறுப்பினராக இடம பெற்றிருக்கின்ற பரூக் அவர்கள், அரசியல் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றார். காங்கிரசுக் கட்சியை வீழ்த்தி, கழகம் உட்பட கட்டணிக்கு இத்தேர்தலில் வெற்றி தேடித் தருவதில் பரூக் அவர்கள் காட்டிய ஆர்வத்தையும், மேற்கொண்ட இடையறாத உழைப்பையும், இதை எழுதுகின்றவர் நேரில் பார்த் தார். இப்பொழுது இப் பெற்றுளள இமமகத்தான வெற்றியில், பரூக் அவர்களுக்கும் பெரும பங்கு உண்டு.

கழகத்தைச் சேர்ந்த பலர், இத்தேர்தலில் வெற்றி பெற்றிருக் கின்றனர். வெற்றி பெற்ற கழகதவர்களில் அனேகமாக ஒருவரும் பிடதகக்கவர்களதான. நகக்கு நகக்கு அறிமுகமான வழகுறிஞர் பெருமான், 'புதுவைச் சிவம்' என அறிமுகமாகியுள்ள சிவம் பிரகாசம் ஆகிய இருவரும், பாண்டிச்சேரி நகராட்சி உறுப்பினர் களாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்களை இருவரும் சட்டப் பேரவை உறுப்பினர்களாகத் தேர்வு செய்வதற்கும தகுதி வாய்ந்தவர்களாவர்.

பழுத்த அரசியல்வாதியான குபேர், வழக்கறிஞர் பெருமாள், புதுவைச் சிவம் உட்பட கழகத தேரமாகனியும, கூட்டணித் தேரமாகனியும் நகராட்சி மன் றங்களுக்குத் தேர்வு செய்திருப்பதன் மூலம், பாண்டிச்சேரி மாநில அரசியல் துறையில் புதிய திருப்பத்திறதத் துவக்க விழா ஆற்றியிருக்கின்ற வாக்காளர் கள் அனைவரையும வாழ்த்துகின்றேம -- பாராட்டுகின்றேம்.

— கா. கை.

வேலை தேடித் தரும் நிலையங்கள் பணி

பயனுள்ளதாக அமைய ஆய்வுக் குழு யோசனைகள்

சென்னை, டிச. 19—

மாநில வேலைவாய்ப்பு ஆலோசனைக் குழுக் கூட்டம் தொழிலமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்றது.

வேலைவாய்ப்புக்காக ஏற்பாடு செய்துவரும் பணிகளே -- குறிப்பாக பர்மா அகதிகளுக்கும் இலங்கையிலிருந்து திருப்பியனுப்பப் படும் அகதிகளுக்கும் வேலைகளைக் கண்டறியும முயற்சிகளைப் பற்றியும் அமைச்சர் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது :—

"பர்மா அகதிகளில் 14,194 பேர் வரை வேலை தேடத்தரும் நிறுவனங்களில் பெயர்களைப் பதிவு செய்துகொண்டுள்ளனர் ; இவர்களில் 1,388 பேர் வரை வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இலங்கையிலிருந்து திரும்பிய இந்தியர்களில் 677 பேர் வரையில், வேலை தேடத்தரும் நிலையங்களில் பெயர்களைப் பதிவு செய்துகொண்டனர் ; இவர்களில் 86 பேர் வரை வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

1968 சனவரி 1-ந் தேதி முதல் 1968 செப். 30-ந் தேதிவரை அங்கனமடைந்தவர்கள் 373 பேர்வரை வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். 622 பேர் வரை வேலை ஏற்பாடு நிலையங்களில் பதிவு செய்துகொண்டு உள்ளனர்.

தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புகள் உள்ளன."

வேலை ஏற்பாட்டு நிலையங்கள் சிபாரிசு செய்யும் ஆட்களேயே வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தனியார் துறை நிர்வாகதினர்களே வற்புறுத்த இயலும வகையில் வேலை ஏற் பாட்டு நிறுவனங்களள விதிமுறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மாலை அரசு மற்றும் அரசுக்கு எடுத்துரைக்கு கூறினார்.

மாறு கேட்டுக்கொண்டது ; மத்திய அரசும் இதற்கான வழிமுறைகளே வகுக்க வேண்டும் என்று குழு கருதியது.

மேலும், தற்போது தனியார் நிர்வாகத்தினர், வேலை தேடித்தரும் நிறுவனங்களில் சிபாரிசு செய்யும் சிலரை மட்டுமே ஏற்கின்றனர் ; இதர பதவிகளில் தங்களள விருப்பப் படி ஆட்களே நியமிக்கின்றனர் என்றும் குழு கருதியது.

தனியார் நிர்வாகத்தினர் வேலை ஏற்பாட்டு நிறுவனங்களின் மூலம் பணியை முழுமையாகப் பயன் படுத்திக்கொள்ள குழு யோசனை தெரிவித்துள்ளது.

தனியார் நிர்வாகத்தினர் தங்கள் நிறுவனங்களில் காலி ஏற்படும் பதவிகளை விளம்பரம் செய்து விண்ணப்பம் கோருவதற்கு முன் எதனகவேலை ஏற்பாட்டு நிறுவனம் சிபாரிசு செய்யும் நபர்களே அப் பதவிகளில் நியமிக்க வேண்டும் ; வேலை ஏற்பாட்டு நிறுவனம் சிபாரிசு செய்ய இயலாத வேறு இதர பதவிகளே மட்டும் அந்த நிறு வனங்களே விளம்பரம் செய்து விண்ணப்பங்களள் கோரலாம்.

பெற்றோர்களும் மாணவர்களும் எதிர் காலத் தொழைக் கருத்திற் கொண்டு திட்டமிட இயலுமவகையில், தற்போது கிடைக்கக்கூடிய வேலை வாய்ப்பு களேப்பற்றியும், பல வேறு தொழில்களுக்குத் தேவையான தகுதிகளேப்பற்றியும் ஒவ் வொரு மாவட்டத்திலும் பிரசாரம் செய்வதற்கான ஏற்பாடுகளேச் செய்யுமாறு குழு வேலை வாய்ப்பு இயக்குநர் அலுவலகத்தைக் கேட் டுக்கொண்டது.

படிக்கும்போதே பகுதி நேர வேலைகளே ஏற்க முன்வரும் மாண வர்களுக்கு அமைதிரி வேலைகளேக் கண்டறிவதற்கான திட்டதைத வகுக்க ரோட்டரி கிளப், லயன்ஸ் கிளப் போன்ற தனிப்பட்ட நிறு வனங்களின் உதவிகளேப் பெறு மாறும் குழு, அரசினரைக் கேட் டுக்கொண்டது.

தாய்-சேய்க்குச் சத்துணவு

தமிழகத்தில் வழங்க 'கேர்' நிறுவன ஏற்பாடு

கேர்வை, டிச. 20—

கைக்குழந்தையுடன் உள்ள தாய் மார்களுக்கும், சிறிய குழந்தை களுக்கும் சத்துணவு அளிப்ப தற்காக அமெரிக்க 'கேர்' நிறுவனம் தமிழ்நாட்டில் -- 1000 நிலையங்களே நிறுவ எண்ணி யுள்ளது.

சென்னையிலுள்ள கேர் நிறுவன நிர்வாகி திரு. பில் ஜானஸ் டன் இத்தகவலே நிருபாகளிடம் தெரிவித்தார்.

துடுப்பின்றி இயங்கும் படகு

படகு என்றல், 'துடுப்பு' இன்றிச் செல்லாது ; சைக்கிள் என்றல், 'பெடல்' செய்யாமல் நகராது.

சைக்கிள் தத்துவத்தினடிப்படையில் புதிய படகு ஒன்றைத் தயாரித்திருக்கிறர் ஒரு பிரிட்டிஷ்காரர்.

இப்படகுக்குத் துடுப்புத் தேவையில்லல ; அதற்குப் பதிலாகச் சைக்கிள் 'பெடல்' போன்ற அமைப்புப் பொருத்தப்பட்டுள்ளது.

இருவர் செல்லக்கூடிய இப்படகில் இருவரும் மாறிமாறி 'பெடல்' செய்தால் படகு நகரும்.

'பெடலு'க்குக் கீழே கீயர் பெட்டி உள்ளது ; 'பெடல்' இயங்குபோது விசை ஏற்படுப் படகு நகர்த்தப்படுகிறது.

துடுப்பை இயக்காப் பயிற்சிப் பெருகுவர்களும் எளிதில் செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது இந்தப் புதிய படகு !

17-அடி 9- அங்குல நீளம் உள்ள இந்தப் படகை காளின மேலேயே எளிதாக ஏற்றிச் செல்லலாம். இதன் எடை 150-பவுண்டுகள் தான்.

பர்மா தமிழர்கட்குத் தொழில் உதவிக் கடன்

பெற்றுக்கொள்ள முன்வரவில்லையாம்

மதுரை, டிச. 19—

"பர்மாவிலிருந்து திரும்பிய தமிழர்கள், சிறு தொழில்களத் தொடங்குவதற்குக் கடன் தர ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது ; இதற்காக ரூ 12 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது ; ஆனால் இப்படிக் கடன் வாங்க பர்மா தமிழர்கள் முன்வர வில்லை.

"இந்தக் கடன் திட்டத்தின்படி பர்மா தமிழர்களுக்கு ரூ. 2,000 கிடைக்கும் ; கூட்டுறவு முறையில் தொழில் தொடங்கினால் ரூ 5 000 தரப்படும்.

'இதேபோன்ற கடன் திட்டம் இலங்கையிலிருந்து திரும்பும் தமிழர்களுக்கும் உண்டு ; இதற்காக ரு. 25,000 ஒதுக்கப்பட் டிருக்கிறது.

"இந்தத் திட்டத்தின்படி, இலங்கைத் தமிழர்கள் முன்று பேர் ரு 3,500 கடன் பெற்றிருக் கின்றனர்"

என்று இராமாதபுரம் மாவட்டக் கலெக்டர் எஸ். டி. என். ஷெட்டி, செய்தியாளர்களிடம் தெரிவித் தார்.

நாகர்கோயில் வாக்காளர் காதுகளைத் துளைக்கும் வெற்றி!

காமராசரின் மோட்டார் படையும் பண பலமும் என்ன செய்யும்?

டாக்டர் மத்தியாசுக்கே மக்கள் வாக்கு-- இராஜாஜி நம்பிக்கை

சென்னை, டிச. 19—

நாகர்கோயில் தொகுதி இடைத் தேர்தல் குறித்து, திரு. இராஜாஜி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:—

"புதுச்சேரியிலும், காரைக்காலிலும் காங்கிரசை இருந்த இடம் தெரியாமல் முறியடித்து விட்டது--தி. மு. க. தலைமைப் பொதுநலக் கூட்டணி.

பதினெட்டு இடங்களில் ஒன்று தவிர பதினேழு இடங்களைத் தி. மு. க.--கூட்டணி புதுச்சேரியில் பிடித்துவிட்டது.

காரைக்காலில் 14 இடங்களில் இரண்டு இடங்களைத் தவிர 12 இடங்களைத் தி.மு.க.கூட்டணி கைப்பற்றிவிட்டது.

இந்த வெற்றி முரசொலி, நாகர்கோவில் தொகுதி மக்களின் காதுகளில் ஒலிக்கும் என்பதில் ஐயமில்லை; எனவே, காமராஜ் அவர்களின் மோட்டார் படையும், பண பலமும் சத்தியப் போரில் என்ன செய்யும்? மக்கள் வாக்குச் சாவடிக்கு நடந்து சென்று தராசு சின்னத்தில் நிற்கும் டாக்டர் மத்தியாசுக்கு வாக்கு முத்திரையிடுவார்கள்.

காமராஜ் அவர்கள் கன்னியா குமரியில் என்ன சாதிக்கப் போகிறார்? தன் சொந்த முன்னேற்றத்திற்காகத்தான் இந்த முயற்சி; மோட்டார் டயர் 'பங்க்ச்சர்' ஆகியிருப்பதை மராமத்து செய்ய இந்த முயற்சி; அதை வெற்றிபெற விடாமல், குமரித் தொகுதி மக்கள், புதுச்சேரி மக்களைப் பின்பற்றி சரித்திரத்தில் பதிவாகக்கூடிய வெற்றியைப் பெறுவார்களாக!"

தமிழக நில அளவை முறையின் சிறப்பு

அமைச்சர் மதியழகன் விளக்கம்

நிலங்கள் சிறு துண்டுகளாகாமலிருக்க ஆளுநர் உஜ்ஜல் சிங் யோசனை

சென்னை, டிச. 19—

தமிழக நில அளவைப் பதிவேட்டுத் துறையினர் தங்கள் முதல் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடினர்.

இராஜாஜி மண்டபத்தில், உணவு --- வருவாய்த் துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் தலைமையில் நடைபெற்ற இவ்விழா நிகழ்ச்சிகளை ஆளுநர் உஜ்ஜல்சிங் தொடங்கி வைத்தார்.

குடியரசுத் தலைவர் ஜாகிர் உசேன், துணைத் தலைவர் வி. வி. கிரி, தலைமை அமைச்சர் இந்திரா காந்தி, இராஜாஜி, டாக்டர் எஸ் இராதாகிருஷ்ணன் ஆகியோரிடமிருந்தும், மற்றும் உள்நாட்டு -- வெளிநாட்டுப் பெருமக்கள் பலரிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

ஆளுநர் உஜ்ஜல் சிங்

ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"நில அளவையையும், புள்ளி விவரச் சேகரிப்பையும் நவீன விஞ்ஞான முறைகளைக் கையாண்டு மேம்படுத்த வேண்டுமென்ற கருத்து அண்மைக்காலத்தில் மேலோங்கி வருகின்றது; இத்துறையினர் இதனை நினைவில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மக்கட் தொகைப் பெருக்கத்தால் ஏற்படக்கூடிய விளைவுகளை நாமறிவோம்; நமது நாட்டில் தக்கபடி இதைத் தடுத்திடாவிட்டால் இன்னும் சில ஆண்டுகளில் இப்போதிருப்பதுபோல இரண்டு மடங்காகிவிடும்.

மக்களனை வருக்கும் உணவு அளித்திடவேண்டும்; இருக்கும் விளை நிலமோ குறைவு; பருவமழை பல நேரங்களில் தவறி விடுகிறது; இந்த நிலையில், மக்களுக்கெல்லாம் உணவளிக்கத் தரிசு நிலங்களைப் பயிர் நிலங்களாக்கவேண்டிய பணி நம்முன் உள்ளது.

பயிர் நிலங்கள் பல்வேறு காரணங்களால் சிறு சிறு கூறுகளாகப் பிரிந்து கிடக்கின்றன.

ஒரு குடும்பத் தலைவர் மறைந்தவுடன் அவருடைய வாரிசுகள் நிலங்களைத் தங்களுக்குள் பங்கு போட்டுக்கொள்கிறார்கள். இவ்வாறு அடுத்தடுத்து ஏற்பட்டுக்கொண்டே போவதால், இருக்கின்ற நிலங்கள் துண்டு துண்டாகப் பிரிகின்றன. உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு இது ஒரு பிரச்சினையாக வந்து சேருகிறது!

தீவிர வேளாண்மை வளர்ச்சிக்குத் துணை செய்யக்கூடியவிதத்தில் இந்தச் சிறு நிலக்கூறுகளைப் பற்றிய விரிவான நில அளவைத் தயாரிக்கப்பட வேண்டும்.

இத்தகையதொரு திட்டத்தைப் பஞ்சாப் மாநிலம் வெற்றியாகச் செயல்படுத்தியிருக்கிறது; அதனால் உற்பத்திப் பெருகி நிலச் சொந்தக்காரர்களும் பயனடைந்துள்ளார்கள்."

கே. ஏ. மதியழகன்

உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் குறிப்பிட்டதாவது:—

"தமிழக நில அளவை முறை புகழ்மிக்கப் பழமையைக் கொண்டது. முதலாம் இராஜராஜசோழன் காலத்திலேயே தமிழ்நாடு நில அளவை முறையைக் கொண்டிருந்தது.

அண்மைக் காலத்தில் ரயத்துவாரி நிலமென்றும் ஜமீன்தாரி நிலமென்றும் இருவகையாக இங்கு இருந்தது. ரயத்துவாரி நில உடைமைகள் பற்றிய விரிவான கணக்கு இருந்தது; ஆனால் ஜமீன்தார்களின்கீழ் இருந்த நிலங்களைப் பற்றிய புள்ளிவிவரங்கள் ஏதுமில்லாமலிருந்தது.

1948-ல் ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டது; அதை அடுத்து இனாம்தாரி முறையும் ஒழிக்கப்பட்டது

நிலங்களைப் பற்றிய புள்ளிவிவரங்களைத் திரட்டும் பணி நில அளவைத் துறையினரிடம் விடப்பட்டது; அவர்கள் இதை 15 ஆண்டுகளில் செய்து முடித்தனர்.

இப்பணியை இவ்வளவு வேகமாகச் செய்துமுடித்த நில அளவைத் துறையினர் நம் நன்றிக்குரியவர்களாகிறார்கள்."

இந்திய சர்வேயர்—ஜெனரல் ஜே எஸ். பெயிண்டால், விழாவில் பங்கேற்று சிறப்புரை நிகழ்த்தினார்.

எட்டுப் பேர்கள் உயிர் தப்பின

காந்தி நூற்றாண்டு விழாவையொட்டி கருணை நடவடிக்கை

மற்றும் பல கைதிகளின் தண்டனை குறைப்பு

சென்னை, டிச. 20—

தமிழகத்தில் 8 பேருக்கு விதிக்கப்பட்ட மரணத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டுள்ளது.

காந்தி நூற்றாண்டு விழாவையொட்டி இந்தக் கருணை காட்டப்பட்டுள்ளது.

காந்தி நூற்றாண்டு விழாவையொட்டி மரண தண்டனை பெற்றுள்ள கைதிகளுக்கு அதை ஆயுள் தண்டனையாகக் குறைப்பதென்று அரசு முடிவுசெய்த தன் பயனாக இந்த 8 பேர்களுடைய உயிர்களும் தப்பின.

மாநிலத்தில் பல சிறைகளில் பல்வேறு காலத் தண்டனை அனுபவித்து வந்த 2,493 பேர், இக்கருணை நடவடிக்கை காரணமாக விடுதலை செய்யப்பட்டுள்ளனர்; இவர்களுக்கு 1 மாதம் முதல் ஓராண்டு வரை தண்டனை காலம் குறைக்கப்பட்டது.

சுமார் 8,000 பேர் வரை ஆயுள் சிறைத் தண்டனையை அனுபவித்துவருகின்றனர்; தொடர்ந்து இவர்கள் சிறையில் இருந்த போதிலும் இவர்களது தண்டனைக் காலம் ஒரு மாதம் முதல் ஓராண்டு வரை குறையும்.

இவ்வாண்டு நவம்பர் 12-ந் தேதிக்கு முன்னதாக மரண தண்டனை விதிக்கப்பட்ட இன்னும் சிலர் இருக்கிறார்கள்! இவர்களது வழக்கு அப்பீல் விசாரணையில் உள்ளதால் இவர்கள் குறித்துஇக்கருணை சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை.

காந்தி நூற்றாண்டு விழாவையொட்டி மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கும் முடிவை சென்ற நவம்பரில் மத்திய அரசு மேற்கொண்டது; இதனையடுத்து, கைதிகள் தண்டனைக் காலத்தை குறைக்குமாறு தமிழக அரசு உத்தரவிட்டது.

இந்த உத்தரவின்படி ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுச் சிறைத் தண்டனையை அனுபவிக்கும் கைதிகட்கு தண்டனைக் காலம் ஓராண்டு குறைக்கப்படுகிறது.

மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் தண்டனை பெற்றுள்ளவர்களுக்குத் தண்டனைக் காலத்தில் நான்கில் ஒரு பகுதி குறைக்கப்படுகிறது. 3 ஆண்டு முதல் 5 ஆண்டு வரை சிறைத் தண்டனை பெற்றவர்களுக்கு மூன்று மாதமும், 5 ஆண்டு—முதல் 10 ஆண்டு வரை சிறைத் தண்டனை பெற்றவர்களுக்கு 6 மாதமும் தண்டனை காலம் குறைக்கப்படுகிறது.

காந்தியார் உயிர்விட்ட இடம் எது?

காங்கிரசுக்காரர்களிடையே கருத்து மோதல்!

புதுடில்லி, டிச. 19—

காந்தி எந்த இடத்தில் உயிர்விட்டார் என்பது பற்றிக் காங்கிரசு நாடாளுமன்றக் கட்சிக்குள் பெரும் பிரச்சினையாக உருவெடுத்தது.

பிர்லா மாளிகை அமைந்துள்ள மைதானத்தில் சுடப்பட்ட இடத்திலேயே மாண்டாரா அல்லது சுடப்பட்டு வீழ்ந்தபின், பிர்லா மாளிகைக்குள் இருக்கும் தமது அறைக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின் உயிர் விட்டாரா என்பது பிரச்சினைக்குரியதாகி பலத்த வாக்குவாதங்கள் எழுந்தன.

"சுடப்பட்ட இடத்திலேயே உயிர் விட்டார்" என்று மக்களவையில் திரு. ஜகநாத ராவ் கூறியதை மறுத்து, அமைச்சர் சந்திரசேகர் அறைகூவல் விடுத்தார்.

பிர்லா மாளிகைக்குள்ளேதான் காந்தியின் உயிர் பிரிந்தது என்றும், எனவே, பிர்லா மாளிகையை அரசு வசப்படுத்த வேண்டும் என்று கோருவது நியாயமே என்றும் திரு சந்திரசேகர் கூறினார்.

தமது கூற்றுக்கு ஆதரவாக, காந்தி இறந்தபோது உடனிருந்து கண்ணால் பார்த்துச் செய்தி தந்த 'அசோசியேடட் பிரஸ் ஆப் இந்தியா' செய்தி நிறுவனச் செய்தியாளரின் அறிக்கையின் நகலையும் சான்றாக அளித்தார்.

மற்றொரு காங்கிரசு உறுப்பினரான திரு. கமல்நயன் பஜாஜ், செய்தியாளர்களிடம் இது பற்றிக் கூறுகையில், 'காந்தி சுடப்பட்ட இடத்திலேயே மாண்டிருக்க வேண்டும்' என்று -- பின்னர் அவர் உடலை அறைக்குக் கொண்டுபோய் பரிசோதித்த மருத்துவர்கள் கூறியதாக -- காந்தியின் மகனான தேவதாஸ் காந்தி தம்மிடம் கூறியதாகத் தெரிவித்தார்.

எனினும், 'சுடப்பட்டு அவருடைய அறைக்குக் கொண்டு வரப்பட்ட நேரம்வரை அவர் உயிருடனேயே இருந்ததாக அப்போது உடனிருந்தவர்கள் கருதுகின்றனர்' என்பதை அவர் ஒப்புக் கொண்டார்.

திரு. சந்திரசேகர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நேரில் கண்ட ஏ.பி.ஐ செய்தியாளரின் அறிக்கைநகல் பின்வருமாறு தெரிவிக்கிறது:—

"இரத்தம் பீறிட்டுக்கொண்டிருந்த நிலையில் நான், மகாத்மா காந்தியைக் கண்டேன்; அவர் கண்கள் மூடியிருந்தன; வழிபாட்டுக் கூட்டத்தில் பிரார்த்தனை செய்வது போலவே அவருடைய கைகள் இருந்தன; அவருடைய பேர்த்திகள் அவரைப் பிடித்து, உட்கார்ந்திருக்கும் நிலையில் வைத்தனர்; உடனே நாலைந்து பேர் அவரை, பிர்லா மாளிகைக்குள் தூக்கிச் சென்றனர்; உள்ளே காந்தியைக் கொண்டுசென்று வைத்திருந்த அறையின் கதவுகள் மூடப்பட்டன; அந்த அறைக்குள் பார்வையாளர் யாரும் அனுமதிக்கப்படவில்லை.

"காந்தியின் நிலைமை என்னாயிற்று என்பதை அறிந்து கொள்ள ஆவலுடன் காத்திருந்த கூட்டத்தினரோடு நானும் இருந்தேன்; மாலை 5-30 மணிக்கு உள்ளேயிருந்து வெளியில் வந்த திவான் சமன்லாலைப் பார்த்து நான், 'மகாத்மா காந்தி எப்படி இருக்கிறார்?' என்று கேட்டேன்; 'உயிருடன்தான் இருக்கிறார்' என்று அவர் பதிலளித்தார்; அடுத்து ஐந்து நிமிடத்துக்கெல்லாம் காந்தியின் குழுவைச் சேர்ந்த ஒருவர், காந்தி இருந்த அறையிலிருந்து ஓடோடி வந்து -- துக்கம் பீறிட்டு வர -- 'பாபு மாண்டுவிட்டார்' என்றார்."

மேற்கண்டவாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

திரு பஜாஜ், செய்தியாளர்களுடன் சாதாரணமாகப் பேசிக் கொண்டிருக்கையில், பிர்லா மாளிகையைக் கைவசப்படுத்த வேண்டும் என்று கோரி உண்ணாநோன்பிருக்கும் காங்கிரசு உறுப்பினரான திரு. சஷிபூஷனை, தமது உண்ணாநோன்பைக் கைவிடுமாறு கேட்டுக் கொண்டார்.

"கடடாயமாக பிர்லா மாளிகையை வசப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை நேரு கூட ஏற்றுக்கொள்ளவில்லை; ஏனெனில், இம்படிக் கோருவது காந்தி எந்தக் கோட்பாட்டுக்காக வாழ்ந்து உயிர்விட்டாரோ அதே கோட்பாட்டுக்கு விரோதமானதாகும்" என்றார் அவர்.

தலைமையமைச்சர் நேரு நிரந்தரமாகக் குடியிருப்பதற்காகப் பிர்லா மாளிகையை அரசிடம் ஒப்படைக்க முன்வந்தபோது, நேரு அதை ஏற்க மறுத்து விட்டதாகவும் திரு. பஜாஜ் கூறினார்.

அதன்பிறகு, அந்த மாளிகையை தேசத் தந்தையின் நினைவாக நாட்டுக்கு நன்கொடையாக வழங்குமாறு தாம் திரு. ஐ. டி. பிர்லாவிடம் கேட்க முயற்சி செய்ததாகவும் திரு. பஜாஜ் சொன்னார்.

அந்த முயற்சியை சர்தார் பட்டேல் விரும்பவில்லை என்றும், பட்டேலின் கருத்தை நேருவிடம் தாம் கூறியதாகவும் தெரிவித்தார்.

"அதன்பிறகு பேச்சு வார்த்தை நடத்தி, காந்தி வழிபாட்டுக் கூட்டம் நடத்திய இடத்தை மட்டும் மக்களுக்குச் சொந்தமாக்க, வேலைபோடப் பட்டது" என்றார்.

மட்பாண்டத் தொழிலில் புதிய முறை

சென்னை, டிச. 18—

செங்கற்பட்டு மாவட்டத்தில் செவ்வாப்பேட்டை என்னுமிடத்திலுள்ள அரசாங்க மட்பாண்டப் பயிற்சி நிலையத்தில் அடுத்த சில வாரங்களில் புது முறைப் பயிற்சி அளிக்கப்படும்.

அங்கு பயிற்சி பெறுவோர் புதிய இயந்திரங்களைக் கையாளவும், களிமண் பிசையும் கருவி--புதுவகை அச்சுக்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தவும் இப்போது வசதி செய்யப்பட்டிருக்கிறது.

தென்னிந்தியாவில் மட்பாண்டத் தொழிற் பயிற்சிக்கு இந்த ஒரே நிலையம்தான் இருப்பதால், தமிழ்நாடு--கேரளம்--மைசூர்--ஆந்திரப் பிரதேசம் ஆகிய இடங்களிலிருந்து இங்கு பயிற்சிக்கு ஆட்கள் வருகிறார்கள்.

வினைஞர்களுக்கு ஐந்து மாதமும், நுட்பத் திறன்வாய்ந்த மேற்பார்வையாளர்களுக்கு ஓராண்டும் இங்கு பயிற்சியளிக்கப்படுகிறது.

மட்பாண்டத் தொழில் நுட்பம், கட்டுமானப் பொருட்களுக்குத் திருந்திய முறைகளில் மட்பாண்டம் செய்தல், களிமண் வேலைப்பாடு ஆகியன இங்கு கற்றுத் தரப்படுகின்றன.

இந்நிலையத்துடன் பீங்கான் பிரிவு ஒன்றும் உள்ளது.

அண்ணா--நம்பூதிரிபாடு சந்திப்பு

திருவனந்தபுரம், டிச. 19—

மாநிலங்களிடையிலான ஆற்று நீர்ப் பிரச்சினை பற்றித் தமிழ்நாடு--கேரள முதலமைச்சர்கள், சென்னையில் டிச. 21-ம் நாள் பேச்சுவார்த்தை நடத்துவர்.

மத்திய பாசன—விசைத் துறை அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ், பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வார்.

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காகத் தொகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் விடுத்த வேண்டு கோளுக்கேற்ப நிதியளித்த தோழர்கள்:—

		ரூ. காசு
19-12-68 இதழ்த் தொடர்ச்சி		1,23,881.47
பம்பாய்—தாராவி தி. மு. க. கிளைச் சார்பில் 7-12-68 அன்று நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் பம்பாய்க் கழகத் தோழர்கள் அளித்த நிதி—தோழர் ஆரியசங்காரன் மூலம்		892.50
நன்னிலம் வட்டத் தோழர்கள்—		
நன்னிலம் அ. நடராசன்	25.00	
ஏனங்குடி வி. சற்குணம்	10.00	
,, என். சவுரிராசன்	10.00	
,, ராம்மோகன்	10.00	
,, சீனிவாச நாடார்	10.00	
புத்தகரம் இரத்தினசாமி	10.00	
சாரைப்பாக்கம் ஜக்காரியா	10.00	
,, மெம். ஜக்காரியா பிரதர்ஸ்	10.00	
கூவத்தூர் மாசிலாமணி	10.00	
காதர் மைதீன், ஏனங்குடி கிருஷ்ண மூர்த்தி, இராமகிருஷ்ணன், கிருஷ்ணன் ஆகியோர்	13.00	118.00
சென்னை அடையாறு கிளாக்சோ லாபரேடரி நண்பர்கள் — ஓ. எஸ். பாலசுந்தரம் மூலம்		180.00
சென்னை-5 கலைஞர் கருணாநிதி நற்பணி மன்றத் தோழர்கள் கா. மதிதாசன், மொய்தீன், கே. ஆனந்தன், ஆர். சீனிவாசன், எம். எஸ். சையத், எஸ். பி. ரசாக், அன்சாரி, அறிவழகன், முகமது அலி ஆகியோர்		23.00
கத்திவாக்கம் எஸ். கிருஷ்ணசாமி		101.00
சென்னை 8-வது வட்டம் கலைஞர் கருணாநிதி நற்பணி மன்றம்		25.00
சென்னை-57 அனல் மின்நிலையம், ம. சொக்கலிங்கம்		11.00
ஒரிசா--சாம்பல்பூர் ஜார்சுகடா கே. ஏ. முருகேசன்		5.00
மதுரை எல்.ஐ.சி. ஊழியர்கள்		101.00
பட்டிவீரன்பட்டி மு. பொன்னையா மூலம்		211.00
திருவாரூர் என். சமரசம்		151.00
இராசபாளையம் மணி-சாமி கலைக் குழுவினர் ஆங்காங்கு நிகழ்ச்சிகளில் வசூலித்த தொகை:—		
சின்னமனூர் நிகழ்ச்சியில்	83.00	
தேவாரம் ,,	62.00	
திருவில்லிபுத்தூர் ,,	30.00	175.00
தாராபுரம் திருமதி வி. பி. பழனியம்மாள் எம்.எல்.ஏ.		101.00
ஈரோடு-6 பள்ளிபாளையம் தி. மு. க. செயலாளர் ஆர். கோவிந்தராசன் மூலம்		75.00
அய்யம்பேட்டை (தஞ்சை) தி. மு. க. கே. எஸ். இராமச்சந்திரன் மூலம்		51.00
அரவேறு (நீலகிரி) திருமதி எல். எம். நீலாண்டி அம்மாள்		50.00
வையம்பட்டி தி. மு. க. சார்பில் சி. சின்னசாமி		50.00
சென்னை-20 டிரான்ஸ்பார்மர்—ஸ்விட்சிகியர் லிமிடெட் தி. மு. க. தொழிலாளர்கள் சார்பில் — சி. சண்முகம்		47.00
குடியேற்றம் மு. கி. கிருஷ்ணன், எம். தர்மராசன், காரியாபாலு, கே. எஸ். ஆறுமுகம், டி. கே. நடேசன், ஏ. வி. துரைசாமி, சோமசுந்தரம், ஜி. லோகநாதன், ஆர்.ஜி. இராதா, டி. சுப்பிரமணி ஆகியோர்		34.05
அரும்பாவூர் ரெ. செங்கமலை		33.00
நாகர்கோவில் அ. அப்துல் ரசாக் எம்.சி.		31.00
சுந்தரம்பள்ளி எஸ். எம். விசுவநாதன்		25 00
ஊத்தங்கரை தி. மு. க. சார்பில் ஆர். சுப்பிரமணியம்		25.00
மாயூரம் எஸ். என். குருமூர்த்தி		25.00
பனையபுரம் தி. மு. க.		25.00
நெய்வேலி மத்திய தொழிற்கூட கழக நண்பர்கள் சார்பாக—துளசிராமன்		17.00
திருவனந்தபுரம் காரை ஜின்னா ஷா		16.00
தூத்துக்குடி வி. திருமலைசாமி		16.00
குளத்தூர் முத்தமிழ் மன்றச் சார்பாக		16.00
திருவனந்தபுரம்—சாலை சி. பி. செல்லம், பி. சங்கர், பி. சுப்பையா ஆகியோர்		15.00
நெய்வேலி கோ. பழமலை		15.00
திருப்பூர்-4 எல். எஸ். நாதன்		11.00
,, கே. இராமசாமி		11.00
சென்னை-56 ஷா வாலேஸ் ஸ்பிரேயர் தொழிற்சாலைத் தோழர்கள் சார்பாக—ஏ. கிருஷ்ணமூர்த்தி		14.00
திருவத்திபுரம் ஆர். செங்கல்வராயன்		10.00
புதுக்கோட்டை ஆர். எம். பழனியப்பன்		10.00
பெரமலூர் தி. மு. க. எம். சண்முகம்		10.00
போளூர் தொ. ப. சீனிவாசன்		10.00
மதுரை-1 வி. சிவசைலநாதன்		10.00
உத்தரகோசமங்கை உ. இராமச்சந்திரன்		10.00
திமிரி தி. ஆ. கண்ணப்பா		10.00
குடியேற்றம்—புதுப்பேட்டை டி. கே. கோவிந்தசாமி		10.00
நெல்லை சந்திப்பு நண்பர்கள்		10.00
சென்னை-52 செங்குன்றம் மா. ந. சண்முகம்		10.00
சென்னை-21 இரா. அ. நாதன்		10.00
கட்லூர்-3 இரா. நடராசன்		5.00
சேலம்-1 எஸ். சி. ஆறுமுகம்		5.00
தெற்கு உடையார்பாளையம் ஏ. பி. ஜானகிராமன்		5.00
நாகர்கோவில் செட்டிகுளம் எம். எஸ். முத்தையா		5.00
திருவில்லிபுத்தூர் கே. சிவப்பிரகாசம்		5.00
போளூர் வி. சொக்கலிங்கம்		5 00
சென்னை-28 முள்ளிக்குப்பம் எம். சின்னகண்ணு		5.00
சோழவந்தான் செல்வி எஸ். சித்திரா		5.00
தேவகோட்டை எம். தனு சுலாஸ்		5.00
செஞ்சி திருமதி சரோஜா அண்ணாமலை		5.00
மாயூரம் சா. மீனாட்சிசுந்தரம்		5.00
திருப்பூர்-4 பிரபாத் ஹோசரி		5.00
,, டிப்டாப் ஹோசரி		5 00
,, பி. தண்டபாணி		5.00
சிறுவாச்சூர் சி. மகரந்தன்		5.00
ரூ. 3 வீதம் அனுப்பிவைத்தோர்:		
கீழக்கரை பி. என். காதர் மஸ்தான், பொன்மலை கி. திருஞானசம்பந்தமூர்த்தி ஆக 2 பேர்		6.00
ரூ. 1 வீதம் அனுப்பிவைத்தோர்:		
சென்னை-23 சி. பிரபாகரன் நாயர், சென்னை-11 ஆர். ஏ. தங்கராசு, போளூர் எஸ். வெங்கட்ராமன், அரியூர் ம. ச. மாணிக்கம்—ஆக 4 பேர்		4.00
சென்னை 50-வது வட்டம் தாளமுத்து நடராசன் நினைவு மன்றம்		7.00
ஆக மொத்தம்		1,26,780.02

மாநில அரசுக்கு எதிராக மத்திய அரசு

நீதிமன்றத்தில் வழக்கு தொடருகிறது!

கடந்த செப். 19-ம் நாள் நடைபெற்ற மத்திய அரசு ஊழியர்களின் அடையாள வேலைநிறுத்தத்தையொட்டிக் கைது செய்யப்பட்டவர்கள் மீதுள்ள வழக்குகளைத் திரும்பப் பெறுவதெனக் கேரள அரசு செய்துள்ள முடிவை எதிர்த்து மத்திய அரசு நீதிமன்றத்தில் வழக்காடும் எனத்தெரிய வருகிறது.

மத்திய அரசு ஊழியர்கள் சம்பந்தமாகக் கேரள அரசு மேற்கொண்டுள்ள நிலை, 'முறையற்றது' என, மத்திய அரசு கருதுகிறதாம்.

வழக்குகளைத் திரும்பப் பெறுவதற்காக மாநில அரசு தாக்கல் செய்யும் மனுக்களை எதிர்க்கும்படி, மாநிலத்திலுள்ள மத்திய அரசு அலுவலகங்களுக்கும் -- இலாகாக்களுக்கிம் இங்கிருந்து உத்தரவு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பரிசுச் சீட்டு விற்பனை

டில்லியிடம் தமிழக அரசு கோரிக்கை

"மக்கள் நலனுக்குரிய திட்டங்களுக்காகத் தமிழக அரசு பரிசுச் சீட்டு நடத்திவருகிறது; மக்களிடமிருந்து இதற்கு மகத்தான ஆதரவு கிடைத்திருக்கிறது.

"அரியானா, பஞ்சாப், கேரளம் போன்ற பல மாநில அரசுகளும் பரிசுச் சீட்டுக்கள் நடத்துகின்றன; இதன் மூலம் கிடைக்கின்ற வருமானம், அந்தந்த மாநில மக்களின் நலனுக்கே பயன்படுத்தப்படுகிறது; எனவே, அவற்றின் விற்பனையும் அந்த மாநிலங்களுக்கே உரியதாக இருக்க வேண்டும்.

"சட்டபூர்வமாக மத்திய அரசு வழிசெய்தால்தான் இவ்வாறு இயங்க இயலும்; எனவே, மத்திய அரசு இதற்கு வழிசெய்ய வேண்டும்; அவ்வாறு செய்தால், மாநிலங்களுக்கிடையே வீண் போட்டி ஏற்படாமல் இருக்கும்"

இவ்வாறெல்லாம் சுட்டிக்காட்டி விளக்கி, மத்திய அரசுக்கு எழுதியுள்ள மடல் ஒன்றில் தமிழக அரசு வற்புறுத்தியிருக்கிறது.

"மோட்டார் தொழிலை நாட்டுடைமையாக்கும் பிரச்சினை, தற்போதைக்கு இல்லை"

என்று மக்களவையில், வர்த்தகத் துணையமைச்சர் முகமது ஷாபி குரேஷி கூறினார்.

குடியரசுத் தலைவர் நாட்டிய அடிக்கல் எங்கே?

கட்டிடம் எழுமுன்பே காணாமற்போன மாயம்!

புதுடில்லி, டிச. 20—

ஒரு நினைவுச் சின்னத்திற்காகக் குடியரசுத் தலைவர் நாட்டிய அடிக்கல்லே (சலவைக் கல்லாலானது) காணாமற் போய்விட்டது; இந்தச் சம்பவம், இந்தியத் தலைநகரிலேயே நடைபெற்றிருக்கிறது.

'கலீப்' என்ற கவிஞரின் நூற்றாண்டு விழா, வரும் பிப்ரவரித் திங்களில் நடைபெறவிருக்கிறது; அவரது நினைவுச் சின்னமாக மண்டபம் ஒன்று எழுப்புவதென முடிவு செய்யப்பட்டு, இவ்வாண்டு துவக்கத்தில் இதற்காகக் குடியரசுத் தலைவர் அடிக்கல் நாட்டினார்; அந்தக் கல்தான் காணாமற் போய் விட்டிருக்கிறது.

தமிழ்க் கவிஞர் மன்றத் துவக்க விழா

செங்கற்பட்டு மாவட்ட தமிழ்க் கவிஞர் மன்றத் துவக்க விழா, 21—12—68 மாலை 4-மணிக்கு வில்லிவாக்கம் சிங்காரம் பிள்ளை பெண்கள் உயர்நிலைப் பள்ளியில்; தலைவர்: நாரண. துரைக்கண்ணன்; திறப்பாளர்: ஔவை டி. கே. சண்முகம்; பேசுவோர்: புலவர் ந. க. உலகநாதன், அகிலன், கோ. இறைமுடிமணி, ஆ. பலராமன்; மாமதுர கவி வி. வே. முருகேச பாகவதர் தலைமையில் பல கவிஞர்கள் பங்கேற்கும் பாரதி கவியரங்கமும் நடைபெறும்.

பாராட்டு -- படத் திறப்பு விழா

சென்னை மாநகராட்சிமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற சா. கணேசனுக்குப் பாராட்டும், திருவலங்காடு ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. சு. சுந்தரனார் படத் திறப்பும் 22—12—68 மாலை 4-மணிக்கு, பழையனூர் ஊராட்சி ஒன்றிய பள்ளியில்; தலைவர்: சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ.; படத் திறப்பாளர்: சா. கணேசன் எம்.சி.; பேசுவோர்: டி. கே. பொன்னுவேலு எம்.எல்.சி., மா. செங்குட்டுவன், வி. பி. அகிலன், பரந்தாமன், சுப்பராயலு, தி. மு. சபாபதி, ஆர். மணி, இரா. பத்மநாபன், எஸ். சம்பத், டி. துரைசாமி, தி. வி. சிவானந்தம்.

கலை நிகழ்ச்சி

மதுரை 41-வது வட்ட தி. மு. க. 17-வது ஆண்டு விழாவையொட்டி 22—12—68 மாலை 7-மணிக்கு கீரைத்துறையில் -- கோ. கருப்பையா தலைமையில், மணி -- சாமி குழுவினரின் தி.மு.க. கலை நிகழ்ச்சி நடைபெறும்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

22--12--68

சென்னை 113-வது வட்டம்

பகுத்தறிவுக் கலை மன்றச் சார்பில் மாநகராட்சிமன்ற உறுப்பினர்கள் சா. கணேசன், சோ. கி. மூர்த்தி ஆகியோருக்குப் பாராட்டு; சிவன்கோயில் தெற்குத் தெருவில் (கோடம்பாக்கம் ராம் தியேட்டர் எதிரில்); தலைவர்: கி. வீராசாமி; பேசுவோர்: பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி., பி. சிவசங்கரன் எம்.பி., காஞ்சி. மணிமொழியார், நீலநாராயணன், மா. செங்குட்டுவன், க. துரை, க. மதன கோபால், செ. கண்ணப்பன், இரா. ஆனந்தன், புலியூர் இராதா.

பச்சைக்கூமாச்சி

தி.மு.க. சார்பில் பகல் 11 மணிக்கு மாரியப்பன் திடலில்; தலைவர்: கந்தசாமி; பேசுவோர்: சி. தமிழரசி, எம். இராசாங்கம் எம்.எல்.ஏ., வ. தம்பித்துரை, கே. சுப்பையா, சி.மெ. ஏசடியான், ஜேக்கப், தனராசு, ஆர். ஜெயராஜ்.

சிவகாசி

எம்.ஜி.ஆர். மன்ற 11-வது ஆண்டு நிறைவு விழா; இரவு 7 மணிக்கு பூங்காத் திடலில்; தலைவர்: ஆர்.பி. ஆதிநாராயணன்; பேசுவோர்: முத்துராமலிங்கம், பொ. அன்பழகன், செ. கதிரவன், நாகலிங்கம், எஸ்.பி. மணியம், சே. அ. ரசாக், சி. பழனிச்சாமி, எம்.எஸ். தங்கசாமி, கே. வி.கே. இராசன், ஆ. கந்தசாமி.

திருத்தங்கல்

நகர் தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு பன்னீர்செல்வம் திடலில்; தலைவர்: எஸ்.கே. சண்முகம்; பேசுவோர்: கே.எஸ். சந்தானம் எம்.சி., ச. அமுதன், எம். ஜி. மாரியப்பன், ஓ.வி. அய்யனார், இரா. பொன்பாண்டியன், எஸ். இளஞ்செழியன், ப. டேவிட் இரத்தினம், எஸ். சுப்பிரமணியன், எஸ்.கே. கோபால், நா.ப. அண்ணாமலைச்சாமி.

குரும்பேரி

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு; தலைவர்: மா. மாரப்பன்; பேசுவோர்: புலவர் பொன்னிவளவன், அரூர் முத்து எம்.பி., டி.சி. திம்மராமன் எம்.எல்.ஏ., சி.எம்.எஸ். பாலு, எம்.கே.எஸ். மணி.

உக்கடை அரியமங்கலம்

அண்ணா அறிவு வளர்ச்சி மன்றத் திறப்பு விழா; மாலை 6 மணிக்கு இரயில்வே கேட் மேல் புறத்தில்; வரவேற்பு: எம்.பி. இராமன்; தலைவர்: சு. இராதாமணாளன்; கொடியேற்றுபவர்: எம். அப்பாச்சி; அண்ணா படத் திறப்பாளர்: மு. நடராசன்; பேசுவோர்: எம்.இ. அபூபக்கர், அ. நடராசன், டி.என். வையாளி, ப. இராமையா. பெ. வடிவேல், கே. திலகராசன், பெரியசாமி, ஏ.ஆர். பெருமாள், தம்பித்துரை.

ரோஜா பாக்கு & புகையிலை
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-17, அச்சிட்டு வெளியிடப்பட்டுகிறது.